DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 193/2023

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் 3, 5 ஆஜர். எதிரிகள் 1, 2,4,6 தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஜெயபால் |
| Father / Husband Name | பனிச்சன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.08.2024

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.08.2015 ம் தேதி அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் காவலராக பணி புரிந்த போது அன்றைய தினம் அதிகாலை சுமார் 4.30 மணியளவில் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு பரந்தாமன் தலைமையில் உதவி ஆய்வாளர் சதாசிவம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஸ்ரீதரன், மணி, சந்திரசேகர் அவர்களுடன் நானும் என்னுடன் தலைமைக் காவல் HC 334 பண்ணீர் செல்வம் மற்றும் தலைமைக் காவலர் HC 281 சண்முகம் ஆகியோர் கயப்பாக்கம் மார்கமாக ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்தபோது ஜிஎஸ்டி சாலையில் உள்ள பெருங்கரணை ஆர்ச் எதிரே சுமார் 6 நபர்கள் அரசு அனுமதி இன்றி அரசுக்கு எதிராக அரசு மதுபாணக்கடைகள் இருக்க கூடாது என்பதற்காக கோஷங்கள் எழுப்பி பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் தொந்தரவாக பொது அமைதிக்கு பங்கம் ஏற்படும் விதமாக மேற்படி நபர்களின் செயல்கள் இருந்ததனால் அவர்களை பலமுறை எச்சரித்தும் அவர்கள் அங்கிருந்து அகன்று செல்ல மறுத்துவிட்டனர்.

2. மேற்படி நபர்களை பெயர் விலாசம் விசாரித்த போது அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக அச்சிறுபாக்கத்தை சேரந்த பாலமுருகன் அஸ்ரப் அலி முஜிபுர் ரகுமான் இந்தலூரை சார்ந்த சுதாகர், இரும்புலியை சார்ந்த அருண் பருக்கலை சார்ந்த சக்திதாசன் என தெரியவந்தது. மேற்படி 6 நபர்களில் இருவர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள். மேற்படி 6 நபர்களையும் அங்கே விட்டு சென்றால் பிடிக்கக்கூடிய குற்றம் நிகழும் என்ற காரணத்தினாலும் மேற்படி குற்றத்திற்காகவும் கைதுக்கான காரணம் கூறி காலை 4.30 மணிக்கு மேற்படி 6 நபர்களையும் ஆய்வாளர்கள் கைது செய்து 5.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து காவல் நிலைய குற்ற எண் 446/2015 பிரிவுகள் 7(1) CLA Act r/w 151 Cr.P.C கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தேன்.

**குறுக்கு விசாரணை**

3. பொதுவாக ரோந்து பணிக்கு 7 நபர்கள் செல்வோமா என்றால் டாஸ்மார்க் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததார் ரோந்துக்கு நாங்கள் 7 நபர்கள் சென்றோம். இந்த நிகழ்வின் போது காவல் நிலையத்தில் மொத்தம் எத்தனை காவலர்கள் இருந்தோம் என்றால் காவல் நிலையத்தில் மொத்தம் 11 காவலர்கள் இருந்தோம். அதில் 7 காவலர்கள் ரோந்து சென்றோம். எவ்வாறு சென்றோம் என்றால் நான் காவல் ஆய்வாளருடன் ஜீப்பில் வந்தேன். சிறப்பு உதவி ஆய்வார்கள் அவரவர் வண்டியில் வந்தார்கள். மேற்படி விவரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. ரோந்துக்கு எத்தனையாவது பீட்டில் நான் சென்றேன் என்றால் அன்று எங்களுக்கு சிறப்பு ரோந்துக்கு செல்ல வேண்டும் என்ற உத்தரவு கிடைத்ததால் பீட் கணக்கில் வராமல் நாங்கள் சென்றோம். விடியற்காலை செல்ல வேண்டும் என்று முந்தைய நாள் இரவு எங்களுக்கு தகவல் கிடைத்தது. மேற்படி விவரத்தை ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தகவல்கள் வாக்குமூலத்தில் கொடுக்க தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. சம்பவத்தில் நடந்த விவரத்தை வாக்குமூலமாக சொல்ல வேண்டும் என்றாலும் எனது வாக்குமூலத்தில் மேற்படி விவரங்களை சொல்லாததால் அவை நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

5. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஜங்சன் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு அருகில் டீகடைகள் இருந்தது என்றால் சரிதான். அவற்றில் சில கடைகள் 24 மணிநேரமும் இயங்கும் என்றால் சரியல்ல. இரவு 11.00 மணிக்கு கடைகள் மூடிவிட்டு காலை 5.30 மணிக்குதான் திறப்பார்கள். சம்பவம் நடந்த 4.30 மணிக்கு டீக்கடைகள் எதவும் திறக்கவில்லை. மேற்படி டீகடைகள் விடியற்காலை 3.00 திரக்கப்படும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரியல்ல. சூணாம்பேடில் இருந்து தேசிய நெடுஞ்சாலைக்கு வந்து வேலைக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ சேர்வதற்கு சம்பவ இடத்தில் தான் பேருந்துகளில் ஏறி சேரமுடியும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து 500 மீட்டர் தள்ளி பேருந்து நிறுத்தம் உள்ளது. விடியற்காலையில் யாரும் பேருந்து நிறுத்தத்தில் ஏறவோ இறங்கவோ இல்லை.

6. சம்பவம் நடந்த இடமாக சொல்லப்படும் இடம் சாலையை கடக்கும் இடம் என்றால் சரிதான். சாலையை கடக்கும் இடத்திற்கு எதிரில் பைக் பார்க்கிங் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் 2 வருடங்கள் வேலை செய்தேன். நான் இரண்டு வருடங்கள் வேலை செய்தும் சம்பவ இடத்தில் என்ன உள்ளது என்று பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த இடத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எதிரிகளை பல முறை எச்சரித்தும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்த விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன்.

7. எனது வாக்குமூலத்தில் நான் மற்றும் மற்ற காவலர்களும் எதிரிகள் ஓடினார்கள் என்றும் அவர்களை மடக்கி பிடித்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி எனது உயர் அதிகாரி என்பதால் சம்பவயிடத்திற்கு செல்லாமல் சம்பவத்தில் இல்லாமல் நான் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் Movement register and Pocket diary தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுவாக ஒரு ஆர்பாட்டம் என்றால் மக்களின் கவனத்தை ஈர்க்க ஆர்ப்பாட்டம் செய்வார்கள்

என்றாலும் மக்கள் யாரும் கூடாத அதிகாலை நேர்த்தில் நான் சொன்னவாறு ஆர்பாட்டம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

8. பொதுவாக மக்களுக்கு தொந்தரவு ஏற்பட்டால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யமுடியும் என்றாலும் வழக்கில் கூறுகள் நிரைவேறவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவ இடம் தேசியநெடுஞ்சாலை என்பதால் பேருந்துகள், வாகனகங்களுக்கு தொந்தரவு செய்யும் விதமாக ஆர்பாட்டம் இருந்தது. இந்த வழக்கில் எதிரிகள் எவ்வாறு தொந்தரவு செய்தார்கள் என்றால் கல்லை தூக்கி எறிந்தார்கள் கத்தினார்கள் மற்றும் இருசக்கர வாகனத்தை வழி மறித்தார்கள். சம்பவம் நடந்த இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை என்று சொல்வது பொய் என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லாமல் மக்களுக்கு தொந்தரவு ஏற்பட்டது என்றும் முன்னுக்கு பின் முரணாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2 வருடங்களாக அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் பணியில் இருந்ததால் எதிரிகள் அனைவரும் முக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள் என்று தெரிந்துள்ளது என்றால் சரியல்ல.

9. 5ம் எதிரி மீது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் அவர் மீது 302 IPC வழக்கு பதிவு செய்து SC 177/2010 வழக்கு செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. தேசிய நெடுஞ்சாலைகளிலும் பள்ளிக்கு அருகிலும் டாஸ்மார்க் கடைகள் இருக்க கூடாது என்று 04.08.2015 காலகட்டத்தில் ஆர்பாட்டங்கள் அதிகமாக நடந்தது என்றால் சரிதான். 5 ம் எதிரி வழக்கின் குற்றச்சாட்டில் ஈடுபடவில்லை என்றாலும் முன் எச்சரிக்கையாக அவரை கைது செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் அரசியல் முக்கிய பிரதிநிதிகளை மதுவிலக்கு ஆர்ப்பாட்டம் காரணம் கூறி கைது செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு தான் வீட்டில் இருந்த 5ம் எதிரியை தவறாக இவ்வழக்கில் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல.

10. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் 5ம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக அவரை சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி தாக்கல் செய்த தவறான வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.